" கர்த்தர் நகரைக் காக்காவிட்டால்
அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் " தாபிதம் : 1876

சத்திய வேத பாதுகாவலன்

தந்தி : " கதலிக் பிறஸ் " யாழ்ப்பாணம்
தொலைபேசி : 300
REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

சத்தியவேத பாதுகாவலன்
வருடசந்தா
இலங்கை : வெளிநாடுகள் :
ரூபா 9-00
( தபாற்செலவு உட்பட )
தனிப்பிரதி சதம் 15

89-ம் புத். | யாழ்ப்பாணம், 1964-ம் ஆண்டு ஆனிமீ 6-ந்திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 22-ம் இல.


# பிரசமய விவகார காரியாலயம்

## வத்திக்கானில் நிறுவப்பட்டது

2-ம்வத்திக்கான்சங்கத்தில் ஏற்கனவே நடந்தஆலோசனைகளின் பயனாக இருவிசேஷ காரியாலயங்கள் தொண்டாற்றத் தொடங்கியிருக்கின்றன. கிறீஸ்தவசபைகளின் ஒற்றுமையை வளர்க்க ஒருகாரியாலயமும், பிறசமயங்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்ள வேறு ஒரு காரியாலயமும் நிறுவப்பட்டுள்ளன. முந்தியது இருவருடங்களுக்கு முதலே 23-ம் அருளப்ப பாப்பரசரால் திறந்துவைக்கப்பட்டது. பிந்தியதை இருவாரங்களுக்கு முதல் 6-வது சின்னப்பபாப்பரசர்திறந்து வைத்தார். இருகாரியாலயங்களும்பிரபல்யமிக்க இரு கருதினல்மாரின் தலைமையில் நடைபெறுகின்றன. கிறீஸ்தவ சபை ஒற்றுமைக் காரியாலயத்தின் தலைவர் கருதினல் பியஎன்பது யாவரும் அறிவர். இக்காரியாலயத்தின் கருமங்கள் மிகத் துரிதமாக நடைபெறுகின்றன. பிறசமய விவகார காரியாலயத்தின் தலைவராகக் கண்ணியமிக்க கருதினல் மெறில்லா அவர்களை பரிசுத்த பாப்பரசர் நியமித்திருக்கின்றார். தமது வேலையைப்பற்றி இக்கருதினல் அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார். "எமது நோக்கம் பிறசமயத்தவர் யாவரையும் சமயமாற்றம் செய்யும்படி ஏற்றுக்கொள்வதல்ல. இக்காரியாலயத்தின் மூலமாக நாம் பிறசமயத்தவரை முன்னிலும் நன்கு அறியவும், நம்மை அவர்கள் அறியப்பண்ணவும் உதவுவதே நமது குறிக்கோளாகும்." இதுபற்றிப் பரிசுத்த பாப்பரசர் பேசுகையில்: "இனிவரும் காலங்களில் றோமாபுரிக்குவரும் எவரும் தம்முடைய தேசகருமங்களைப்பற்றியோ, தமது சமய கருமங்களைப்பற்றியோ ஒன்றும் அறியமுடியாதவராகித் தயங்கி நிற்கும் நிலைமை ஏற்படாது" என்றார்.

## தொலைக்காட்சியில் 40,000,000 மக்கள்
## திவ்விய பூசைப்பலியைக் கண்டனர்

இங்கிலாந்து வெஸ்மினிஸ்டர் தேவாலயத்தில் அதிமேற்றிராணியார் ஹீனன்அவர்கள் இஸ்பிரீத்துசாந்துவானவர் திருநாளன்று ஒப்புக்கொடுத்த திருப்பலியை, இங்கிலாந்து, பிரான்சு, ஜேர்மனி, ஒல்லாந்து, பெல்ஜியம், சுவிட்சர்லாந்து, லக்செம்பேர்க்ஆகிய இத்தேசங்களில் தொலைக்காட்சிமூலம்40,000,000 மக்கள் காணக்கூடியதாக இருந்தது. எட்டுப்பாஷையில் செபங்கள் ஓதப்பட்டன. திருப்பலியின் விளக்கங்களை எட்டுப் பாஷைகளிலும் அதேநேரத்தில் ஒவ்வொரு பாஷையிலும் எடுத்துக் கூற விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டன. தேவாலயத்தில் உள்ள சித்திரவேலைப்பாடுகள் யாவும் மிகத்தெளிவாகத் தோற்றத்தக்கதாகத் துலாம்பர வெளிச்சங்கள் உதவிபுரிந்தன. விஞ்ஞானசாஸ்திர அறிவின் வளர்ச்சியானது தேவனது புகழைப்பாடவும், அவரது பெருமையை எடுத்துக் காட்டவும் உபயோகிக்கப்படாவிடில் அந்த அறிவினல் யாது பயன் ?எனும் கருத்தமைய அன்றைய பூசைப்பலியில் அதிமேற்றிராணியார் ஒருவிசேஷ பிரசங்கம் செய்தார். மேலும், இப்பூசைப் பலியினல் ஒன்றிக்கப்பட்டதேசங்களின் பாக்கியத்தைப்பற்றி எடுத்துக்கூறி, தனது தேசமக்களுக்கு மாத்திரம் உபதேசம் செய்வதுடன் நின்றுவிடாது பிறதேச மக்களுக்கும் தேவனின் உண்மைகளை எடுத்துக்காட்டவும், அவர்களுடன்சேர்ந்து தேவனைப் புகழவும், ஆராதிக்கவும் செய்யப்பண்ணிய விஞ்ஞான அறிவு வளர்ச்சிக்காகத் தேவனுக்கு நன்றிகூறினர்.

## கிறீஸ்தவசபைகளின் ஒற்றுமைத்தூண்கள் இல்லற கிறீஸ்தவர்களே

மேற்கு உலகில் பலபாகங்களிலும் பலகிறீஸ்தவ சபைகளும் பலகருமங்களில் ஒன்றுசேர்ந்து இயங்குவதுகண்டு, அவுஸ்திரேலியாவிலும் அவ்வாறு செய்ய முன்வந்திருக்கின்றனர். அவர்கள் இதற்கென நடத்த இருக்கும் முதற்கூட்டத்தில் பிரதம பேச்சாளராக இந்தியதேச நாக்பூர் பிரிவின் அதிமேற்றிராணியாராகியரேமன்ட்ஆண்டகையவர்களை வரவழைத்திருக்கின்றனர். அவர் அவுஸ்திரேலியாவில் சந்தித்த பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில்: "கிறீஸ்தவஒற்றுமை இல்லற கிறிஸ்தவர்களின் முயற்சியினலேயே ஆகவேண்டும். கிறீஸ்தவசபைகளின் ஒற்றுமைத் தூண்கள் இல்லற கிறீஸ்தவர்களே" என்றார்.

## சிலாப மேற்றிராசன
## சற்பிரசாத சமாகமம்

சிலாபமேற்றிராசனம் நிறுவப்பெற்ற 25-ம்ஆண்டு வெள்ளி யூபிலிவிழாவையும், சிலாபமேற்றிராணியாரான மகாவந். மொன்சிஞ்ஞோர் எட்மன்ட் பீரிஸ்ஆண்டகையின் மேற்றிராணித்துவ அபிஷேக வெள்ளியூபிலிவிழாவையும் ஞாபகப்படுத்துமுகமாக அடுத்துநிகழும் 1965-ம்ஆண்டு நிகழவிருக்கின்ற சற்பிரசாத சமாகமத்திற்கென்று பிரமாதமானஆயத்தங்கள் நடைபெற்றுவருகின்றன. 1940-ம்ஆண்டு சித்திரைமாதம் 25-ந்திகதியன்று சிலாபமேற்றிராணியாராக அபிஷேகம்செய்யப்பெற்ற எட்மன்ட் பீரிஸ்ஆண்டகைஅவர்கள் அடுத்தவருடம் தமதுவெள்ளியூபிலிவிழாவைக் கொண்டாடவிருக்கின்றார். சிலாபமேற்றிராசன வெள்ளியூபிலிவிழா நிகழும் 1964-ம்ஆண்டு தைமாதம் 5-ந்திகதியன்று வந்துபோயிற்று.

## ஜப்பானிய புறெட்டஸ்தாந்தினருக்குப்
## பரிசுத்த பாப்பரசரின் வேண்டுகோள்

சமீபகாலத்தில் யப்பானியதேச புறெட்டஸ்தாந்தினர் சிலர் 6-வது சின்னப்ப பாப்பரசரை வத்திக்கானில் தரிசிக்கச் சென்றிருந்தனர். அத்தருணத்தில் பரிசுத்த தந்தை அவர்களது ஊக்கத்தைப்பாராட்டி, அவர்களைக் கத்தோலிக்கருடன் ஒன்றுசேர்ந்து உழைக்குமாறு விண்ணப்பித்தார். "நீங்கள் இங்குவந்ததே, கத்தோலிக்க சமயத்தில் உங்களுக்குள்ள மதிப்பைக் காட்டுகின்றது. யப்பானிய கத்தோலிக்கருக்கும், புறெட்டஸ்தாந்தினருக்கும் இடையில் பாரம்பரியமாக நல்லுணர்ச்சி நிலவிவந்திருக்கிறது. உங்கள் தேசத்தில் கிறிஸ்தவர்களின் தொகை மிகச் சிறிதே. ஆகவே, கிறிஸ்துநாதரின் பெயர் புகழப்படவேண்டுமாயின், உங்களிடையில் நெருங்கிய தொடர்பும் ஒற்றுமையும் இருக்க வேண்டும்; இதற்காக நாம் தேவனிடம் மன்றாடி வருவோமாக" என்றார் பரிசுத்ததந்தை.

## கிறீஸ்தவ போதகர்களை நாடுகடத்ததூண்டுகிறார் திரு. குருசேவ்

சமீப காலத்தில் எகிப்துதேசம் சென்றிருந்த சோவியற் பிரதமர் திரு. குருசேவ் அங்கே அஸ்வன் பட்டணத்தில் வைகாசிமாசம் 14-ந்திகதி சொற்பொழிவு ஆற்றுகையில் கிறீஸ்தவ போதகர்களை ஆபிரிக்காகண்டத்திலிருந்து அகற்றிவிடுவதே ஆபிரிக்கமக்களின் சுபீட்சத்துக்கும், முன்னேற்றத்துக்கும் அடிகோலும் வழியாகும் என்று கூறியிருப்பதாக மேற்கு ஜேர்மன் செய்தியொன்று கூறுகின்றது. இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லையே! "எனக்காக நீங்கள் பல இடங்களிலும் வெறுக்கப்படுவீர்கள்" என்று எமது இரட்சகர் தாமே கூறியிருக்கின்றார் அல்லவா ?

## பிரிந்த சகோதரர் நடுவில் கத்தோலிக்க மேற்றிராணியார்

பிட்ஸ்பேர்க் நகரில் மெதடிஸ்ற் சபையைச்சேர்ந்த பிரிவினைச் சகோதரர்களின் சிறப்புக்கூட்டமொன்று நடைபெற்றது. இதற்கு ஏறக்குறைய 900 பிரதிநிதிகள் பெரிய பிரித்தானியாவின் பல்வேறு இடங்களிலிருந்து வந்திருந்தனர். இச்சபையில் சில சீர்திருத்தங்கள் செய்யும் கருத்துடன் இக்குழு கூடியது. இச்சபையின் தலைவர்கள், பிட்ஸ்பேர்க்நகர் கத்தோலிக்க மேற்றிராணியாராகிய மிகவந். ஜோன்றைட் ஆண்டகை அவர்களை ஆரம்பஉரை நிகழ்த்தும்படி கேட்டுக் கொண்டனர்.

● பல கிறிஸ்தவசபைப் பிரதிநிதிகளைக்கொண்ட குருமார்கோஷ்டியொன்றைவரவேற்ற ஐக்கியஅமெரிக்க தேச ஜனதிபதி ஜோண்சன் சமஉரிமைப் போராட்டத்தில் விரைவில் வெற்றிகிடைக்கும் என்பதாக உறுதி அளித்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### ஆனி மாதம் — 1964.

| | | | |
|---|---|---|---|
| 7 | ஞா. | பெந்தக்கோஸ்துவுக்கு பின்வரும் 3-ம் ஞாயிறு | [ப] |
| 8 | தி. | காலதினம் | [ப] |
| 9 | செ. | காலதினம் | [ப] |
| 10 | பு. | அர்ச். மார்க்கரித்தம்மாள் | [வெ] |
| 11 | வி. | அர்ச். பர்ணபாஸ் | [சி] |
| 12 | செ. | அர்ச். பக்குந்தோ அருளப்பர் | [வெ] |
| 13 | ச. | அர்ச். பதுவை அந்தோனியார் | [வெ] |


# சத்தியவேத பாதுகாவலன்

1964-ம் ஆண்டு ஆனி மாதம் 6-ந் திகதி


## ஸ்ரீ ஜவஹர்லால் நேரு

ஆசிய கண்டத்தின் அடிமைத்தளையை அகற்ற அரும்பாடுபட்ட ஜோதி அணைந்து விட்டது.

உடனிருந்து வாழும் உத்தம கொள்கையை உலகுக்கெடுத்தோதிய ஒலி அடங்கிவிட்டது.

அடிமை இருளிலும் அறியாமையிலும் ஆழ்ந்திருந்த பாரதத்துக்குச் சுதந்திர உணர்ச்சியை ஊட்டியவர் நேரு

வளமிக்க வாழ்க்கையைத் தாய்நாட்டுக்காக உதறித் தள்ளியவர் அவர்.

இன்னல்கள் நடுவே சோர்வுறுது சுதந்திரப் போரைத்திறமையுடன் நடாத்தியவர் அந்த உத்தமர்.

பிறந்த பொன்னாட்டுக்காகக் கடுஞ்சிறையில் கஷ்ட வாழ்வு மேற்கொண்டவர் அத்தியாகி.

நாடு விடுதலை பெற்றபோது அவர் பொறுப்பு அதிகமாகியது.

தாய்நாட்டின் தலைமைப் பதவி அவரைத் தேடிவந்தது.

ஒரு ஜனநாயக அரசாங்கத்தில் நீண்டகாலம் தலைமைதாங்குவது சாதாரணமானது அல்ல.

உலக ஜனநாயகநாடுகளிலே ஜனத்தொகையில், இடப்பரப்பில் மிகமிகப் பெரியது பாரதம்.

பதினேழுவருடங்கள் அந்நாட்டின் பிரதமராகப் பணியாற்றினார் நேரு.

அந்தப் பதினேழுவருடங்களிலும் பாரதம் கண்ட சோதனைகள் தான் எத்தனை ?

அத்தனையையும் திறமையாகச் சமாளித்து அலைகடலில் நிலைதவறுது நாவாயை நடத்தும் நல்லதொரு மீகாமனாகத் திகழ்ந்தார்.

ஆசியாவில் பரவிவரும் பொதுவுடமையைத் தடுத்து நிறுத்திய பெருமை அவருடையது.

மதவெறியின்றி இந்திய மக்கள் சமரசமனத்தினராய் வாழ்வதும் அவரது பரந்த மனப்பாங்குக்கு ஓர் அறிகுறி.

பாரதம் என்ற நாவாய் தன் சிறந்த மீகாமனை இழந்து விட்டது.

சுதந்திர ஈழம் தன் பிரிய நண்பனைப் பிரிந்து விட்டது.

சமாதானத்தை விரும்பும் உலகு நடுவுநிலைக் கொள்கையாளனொருவனின் உத்தம சேவையை இழந்துவிட்டது.

யுத்தமில்லா உலகு ஒன்றுதான் திரு. நேருவின் சேவைகட்கு நாம் காட்டும் நன்றி என்கிறார் ஒரு பிரமுகர்.

அதுமட்டுமல்ல,

இன, மொழி, மத பூசல்களில்லா உலகே அவருக்கு நாம் காட்டும் நல்ல கைம்மாறு ஆகும்.

மாதத்தின் வெள்ளிக்கிழமைகளிலே தொடர்ந்து ஒன்பது கிழமைகள் திவ்வியநன்மை வாங்குகிறவர்கள் சாகும்போது ஈறுந்த வரப்பிரசாதத்தை அடைந்துகொள்வார்கள். அவர்கள் நமது கிருபையை அடையாமலும், தேவதிரவிய அனுமானங்களைப் பெறுமலும் சாகமாட்டார்கள். மரணத்தருவாயில் நாம் அவாகளுக்குத் தவருத தஞ்சமாயிருப்போம். இவையெல்லாம் சர்வவல்லபமுள்ள நமது இருதயத்தின் நேசத்தினுல் அவர்களுக்குக் கிடைக்குமென்று மிதமிஞ்சிய நேசத்தினுல் நாம் வாக்குப்பண்ணுகின்றேம். — யேசுநாதசுவாமி.

## யேசுவின் திருஇருயப் பக்தி

( பி. சவிரிமுத்து )

இருதயம் அன்பின் பிறப்பிடம். அது அன்பின் இருப்பிடம். மக்களைத் தம்முயிரிலும் மேலாகநேசித்த நமது கர்த்தராகிய யேசுக்கிறீஸ்துநாதரை, எமது மீட்பரை நாங்கள் நேசிப்பது சரியானதும், பொருத்தமானதுமன்றோ!

கர்த்தருடைய திருவிலாவில் ஈட்டி ஊடுருவிய நாட்தொட்டே திருஇருதயப்பக்தி ஆரம்பித்தது எனலாம், இதைச்சற்று ஆராய்வோம். அவருடைய வாழ்க்கைமுழுவதும் அவர் எம்மிற் கொண்டுள்ள அளவற்ற அன்புக்குச் சாட்சிபகருகின்றதன்றோ ! அட்டதரித்திரனாய் அன்றொருநாள் மாட்டுக்கொட்டிலில் மனிதனுகப்பிறந்தார். இது எதற்காக? மக்களின்மேற் கொண்டுள்ள மட்டற்ற அன்பின்நிமித்தமே தமது முப்பதுவருட காலத்தை ஓர் ஏழைக்குடும்பத்தில் பிரயாசையானவேலை, கீழ்ப்படிதல், தாழ்மைமுதலிய புண்ணியங்களை அனுசரித்துச் செலவிட்டதன் காரணம் என்ன ? எம்மேற் கொணடுள்ள எல்லைகடந்தஅன்புதான்.

தமது மரணத்துக்குமுந்திய மூன்று வருட காலத்தையும் அரும்போதனைகளைச் செய்வதிலும், பெரும் புதுமைகளைச் செய்வதிலும் செலவிட்டாரே ! இது என்னத்தின் நிமித்தம்? மனுக்குலத்தில் கொண்டுள்ள மட்டற்ற அன்பின்நிமித்தம் அல்லவா? கடுஞ்சிலுவையைத் தோளிற்சுமந்து, கல்வாரிமலைமட்டும் தொய்வோடேநடந்து, தமதுகடைசிச்சொட்டு இரத்தத்தையும் எங்களுக்காகச் சிந்தித் தமது உயிரையும் எங்களுக்காகத் தியாகம் செய்தார். இது ஏன் ? மீண்டும் மக்களில் அவர்கொண்டுள்ள அளவற்ற அன்பின் நிமித்தமே. சுருக்கமாகக்கூறின் பசாசின்அடிமைகளாகிய எங்களைப் பரலோகபிதாவின் சுவீகாரப் புத்திரர் ஆக்கினார். மூடப்பட்டிருந்த பரலோகவாசலைத் திறந்து நாங்கள் மோட்சம் சேர எங்களுக்கு வழிதிறந்தார். இதிலும்பார்க்கத்தேவன் தானும் எங்களுக்குச் செய்யக்கூடிய நன்மை வேறென்றுண்டோ ? அவர் சுமார் முன்னூறு வருடங்கட்குமுன் அர்ச். அலக்கோக் மார்க்கரித்து மரியம்மாளுக்குத் தம்மைக்காட்டி, "இதோ மக்களை அளவற்ற அன்புடன் நேசித்த என் இருதயத்தைப் பார்" என்றுகூறி, தாம் மக்களில்கொண்டுள்ள அன்பை எமக்குஎடுத்து விளக்கியிருக்கிறார். "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை செய்ந்நன்றி கொன்றமகற்கு" என்று திருவள்ளுவர் கூறியிருக்கிறார். ஆகவே, அளவு கடந்த அன்புடன் எங்களை நேசித்த யேசுவின் திருஇருதயத்தை நாம் சிநேகித்தல் அவருக்கு நன்றிகூறுதல், அவருக்கு நிந்தைப்பரிகாரம் செய்தல் மூதலியன நம் கடமைஅன்றோ ?

திருஇருதயப்பக்தி ஆதித்திருச்சபையிலே காணப்பட்டபோதிலும் இந்தப் பக்தியைத் திருச்சபை முழுவதிலும் பரம்பச் செய்வதற்குக் கர்த்தர் அர்ச். இயூட் அருளப்பர் என்பவரைத் தூண்டியருளினார். இவர் 1670-ம்ஆண்டில் திருஇருதயப் பூசைச்செபங்களையும், மந்திரமாலையையும் முதன்முதல் உண்டாக்கினார். 1675-ம்ஆண்டில் அர்ச். அலக்கோக் மார்க்கரித்து மரியம்மாள் மாள்என்னும் ஒரு கன்னியாஸ்திரிக்கு எங்கள் ஆண்டவராகிய யேசுக்கிறீஸ்துநாதர்தாமே தரிசனமாகி, சற்பிரசாதத் திருநாளுக்குப் பின்வரும் எட்டாம் நாளுக்குப் பின்வரும் வெள்ளிக்கிழமையில் திருஇருதயத் திருநாளை ஏற்படுத்துவிக்கும்படி ஏவினார். அக்காட்சி வேளையில் மாசத்தின் முதல்வெள்ளி அனுசரணைப் பக்தியைப்பற்றி அவர் வற்புறுத்தியது யாவரும்அறிந்த உண்மையே. 1765-ம்ஆண்டு 13-ம் சாந்தப்பர்எனும் பாப்பானவர் திருஇருதயத் திருநாளைச் சிலவிடங்களில் கொண்டாட உத்தரவு கொடுத்தார். 1856-ம் ஆண்டில் 9-ம் பத்திநாதர் அதை உலகமெங்கும் நடப்பிக்கவைத்தார். 1929-ம் ஆண்டில் 11-ம் பத்திநாதர் திருவிருதயத் திருநாளுக்கு ஒரு புதுப் பூசையையும் மந்திரமாலையையும் வழங்கச் செய்தார்.

எமது உத்தம மாதாவாகிய சத்தியதிருச்சபை எங்கள் மத்தியில் யேசுவின் திரு இருதயப் பத்தியை வற்புறுத்தும் நோக்கமாக, வளர்ப்பதற்காக, ஆனிமாதம் முழுவதையும் யேசுவின் திரு இருதயத்தின் வணக்க மாசமாக ஒதுக்கியிருக்கிறது. ஆகவே திருச்சபையின் மக்களாகிய எங்களின் கடமைதான் என்ன ? யேசுநாதர் சுவாமி எங்களிடம் கேட்கும் பேருதவிதான் என்ன ?

"மகனே ! மகளே ! உன் இருதயத்தை எனக்குத்தா "... "நீ என்னை நேசித்தால் என் கற்பனைகளை அனுசரி" என்றிவ்வாறு நம்மிடம் கேட்கிறார். ஆகவே தேவஅன்பின் செயல்கள் எல்லாவற்றையும் நினைவுகூர்ந்து அவரை இம்மாதத்தில் விசேஷமாக அனுதினம் பூசைவேளையில் சமுகமளித்து அவரை ஆராதிப்போமாக. சருவேசுரன் மனிதரின் நேசத்தால் மனிதனுய்வந்ததைப் பற்றியும் அவர் தம்முடைய கடைசிச்சொட்டு இரத்தத்தையும் சிலுவைமரத்தில் எமக்காகச்சிந்தியதைப் பற்றியும் நாம் நன்குணர்ந்து அவருக்கு நன்றிகூறுவோமாக. ஆனால் எத்தனையோ மனிதர் இவற்றை உணராமல் திரு இருதயத்துக்குத் துரோகமும் அவமானமும் விளைவிப்பதை நாம் உணர்ந்து அவருக்கு நிந்தைப்பரிகாரம் செய்ய நாம் முன்வர வேண்டுமல்லவா ? "எனக்கு ஆறுதல் அளிக்கும் ஒருவனையாகுதல் நாம் காணேமே" என்று திருஇருதயநாதர் மார்க்கரித்து மரியம்மாளுக்கு முறையிட்டதாக நாம் வாசிக்கிறேம். என்ன நன்றிகெட்ட மக்களின் செயல்? என்ன அவலநிலை? ஆகவே எங்களை முழுவதும் அவர் நேசத்துக்குப் பலியாக, விசேஷமாக இம்மாதத்தில் ஒப்புக்கொடுக் முன்வருவோமாக.

ஈற்றில், "கேளுங்கள், கொடுக்கப்படும்" என்று கூறிய எமது திரு இருதய ஆண்டவரிடம்சென்று எமது இகபரநன்மைகளுக்காக இரந்து மன்றுடுவோமாக. அவரிடம் விசேஷமாக "யேசுவின் மகாபரிசுத்த இருதயத்தை உமது இருதயத்துக்கு ஒத்ததாகப் பண்ணியருளும்" என்று மன்றுடிச் சாந்தமும், தாழ்ச்சியும் நிறைந்தவர்களாகச் சீவிக்க முயற்சிப்போமாக.

● இத்தாலிய பார்மாநகரிலே சமீபத்தில் திறக்கப்பட்டுள்ள சர்வதேச சர்வகலாசாலைக் கல்லூரிக்குக் காலஞ்சென்ற 23-ம்அருளப்ப பாப்பரசரின் நாமம் இடப்பட்டிருக்கிறது. இத்தாலியிலே தனிப்பட்டவர்களாலும், மற்றும் ஸ்தாபனங்களாலும் அருளப்பட்ட வித்தியா வெகுமதிகளைப்பெற்று ஏற்கனவே ஆபிரிக்க, ஆசிய, லத்தீன்அமெரிக்க மாணவர்கள் அதில்சேர்ந்து கல்வி பயின்று வருகின்றார்கள்.

● பரிசுத்தபிதா சின்னப்ப பாப்பரசர் அன்று ஞாயிற்றுக்கிழமை வத்திக்கான் மாளிகையிலுள்ள பவுலின் சிற்றுலயத்திலே 28முடப்பிள்ளைகளுக்கு உறுதிப்பூசுதல் அருளலாயினர். அவர் சென்ற ஆனிமாதம் பாப்பரசராக வந்த பின்னர் உறுதிப்பூசுதல் அருளியது இதுவே முதன்முறையாகும்.

● காலஞ்சென்ற இந்தியபிரதமர் பண்டித ஜவஹர்லால்நேரு அவர்கள் 1955-ம்ஆண்டு வத்திக்கான் மாளிகையைத் தரிசித்திருக்கின்றார். அப்போது அவர் 12-ம்பத்திநாத பாப்பாசரைச் சந்தித்துக் கலந்துரையாடிக்கொண்டு திரும்பலாயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**அன்பார்ந்த தம்பி, தங்கையர்களே உங்களுக்கு என் அன்புகனிந்த வணக்கம்**

வறுமை, துன்பம், இடையூறுகள் கொடியவை; மனிதர் வெறுப்பவை; ஆனால் பிரிவுமிகவுங் கொடியது.

மரணம் பிள்ளைகளைப் பெற்றோரிடமிருந்து பிரிக்கிறது. சிநேகிதர்களைத் தனித்திருக்க விடுகிறது. தனையரைத் தவிக்கவைக்கிறது. சகோதரருக்குச் சதிசெய்து விடுகிறது. நினைக்கும்போதெல்லாம் ஆற்றொணாத் துயருண்டாகின்றது.

மரணம் நமக்குத் துன்பந்தர வேண்டியதில்லை. ஆத்துமம் அழியாதது; இப்பரதேசத்தின்பின் நாம் மோட்சத்திற் சந்திப்போம் என்றநம்பிக்கை எமக்கு ஆறுதல்தரும்.

மரணத்திலும் கொடியது வேறொன்றுண்டு. அது தந்தை, தாய், தமர் தாரம், மகவுமுதலியோரை மறக்கமுடியாதவிதமாய்ப் பிரித்துவிடுகிறது, அதுதான் பாவம்.

பாவத்தினால் இவ்வுலகத்தில் நாம் பிரிந்துவிடுவதில்லை. அந்த மறக்க முடியாதபிரிவு மறுமைச் சீவியத்திற்தான் உண்டாகும். அதற்குத்தான் நாம் பயப்படவேண்டும். அதைத்தான் நாம் வெறுக்கவேண்டும்.

யேசு தேவாலயத்தில் காணமற்போன சம்பவம் இதைநமக்கு நினைவூட்டுகிறது. யேசுவை இழக்கச்செய்வது சாவானபாவம். யேசுவை இழப்பது மிகவும் தீமையானது. எல்லாத் தீமைகளிலும் பெரியது. ஆகையால் சாவான பாவத்தையிட்டு நாம் பிரலாபிக்கவேண்டும். தேவஅன்னை தேவாலயத்தில் யேசுவைஇழந்து பரதவித்தாரே. அப்படிப்பட்ட பயமும், பரதவிப்பும் எம்மிடமிருந்தால் யேசுவை ஒருபோதும் இழந்துபோக மாட்டோம்.

—அண்ணா.

## முடக்கொத்தான்

. வாங்க முதலியாரே! உங்களுக்கு ஆயிசு நூறு. இப்பதான் உங்களைப் பற்றி நினைச்சுக்கிட்டிருந்தேன். நீங்களே வந்துட்டீங்க! இப்பிடி உட்காருங்கோ...... சாமிநாதன் இருக்கை ஒன்றைத்தூக்கி அவர்பக்கமாக வைத்தார்.

முதலியாரின் முகம் கடுகடுத்துக் கொண்டு வந்தது.

ஓய், சாமியாரே இந்த உபசரணையெல்லாம் இருக்கட்டும்; எங்கே காணும் உம்மவன் ......?

மகனா? ஏங் கேக்கிறீங்க? இன்னும் பள்ளிக்கூடம் முடியவில்லையே!

பள்ளிக்கூடம்! இவங்களுக்கெல்லாம் என்னபடிப்பு வேண்டி இருக்கிறது!

ஏன் முதலியார் என்ன நடந்து போச்சு?

ஏன் கேக்கிற அந்த அனியாயத்தை. ஊரில நாட்டில காலிப்பசங்களோட நிம்மதியா வாழ முடியல்ல! உன்மவன அடக்கிவைச்சிரு. நான் வர்றேன்! விர்என விரைந்தார் முதலியார்.

விசியத்தைச் சொல்லாம போறீங்களே முதலியார்வாள். அப்புடி பெடியன் என்னதவறு செய்திட்டான். அதைமட்டும் சொல்லிவிட்டுப் போங்க.

சொல்லுறேன் கேளு. விடியக்கால கோடி மதில்பக்கமா ஏதோ சத்தம் கேட்டுது. நம்ம அலிஸ் டோக் பாஞ்சு போறதுக்குள்ளே உம்மவன் மதிலாலபாஞ்சு ஓடினான். அவனோட பவுண்டன்பேனா.... இந்தா இருக்கு.

எடியே, ஆனந்தவல்லி கேட்டியா சேதியை. (வளரும்)

## அங்கத்தவர் வரிசையிலே........

| | | |
|---|---|---|
| B 426 | செல்வி | டெலிசியா பெர்னாந்து, திருமலை |
| 427 | ,, | பிரேன்சினா பெர்னாந்து. திருமலை |
| 428 | செல்வன் | அ. ஞானேந்திரன், ஊறணி |
| 429 | ,, | செ. விக்ரர் பீரிஸ், பேசாலை |
| 430 | செல்வி | லூர்துமலர் மரியாம்பிள்ளை, சில்லாலை |
| 431 | செல்வன் | எல், ஞானப்பிரகாசம் பீரிஸ், கொச்சிக்கடை |
| 432 | ,, | கி. மி. பிரான்சிஸ், மன்னார் |
| 433 | செல்வி | தே. மரியராணி, விடத்தல்தீவு |
| 434 | செல்வன் | எ. யோசவ் இம்மானுவல், அச்சுவேலி |
| 435 | செல்வி | ம. திரேசம்மா, எழுதுமட்டுவாள் |
| 436 | செல்வன் | சூ மாசில்லாமணி, எழுதுமட்டுவாள் |
| 437 | செல்வி | சூ. மேரி ஜேட்றாட், எழுதுமட்டுவாள் |
| 438 | ,, | றீற்றா கிறகோரி, அநுராதபுரம் |
| 439 | செல்வன் | வெ. தியோகுநாதன் பீரிஸ், பேசாலை |
| 440 | செல்வி | நீ. ஜொஸ்லின் ஜெயமரி, மிருசுவில் |
| 441 | செல்வன் | அ. மரிய அந்தோனி சில்வா, பெரியபண்டிவிரிச்சான் |
| 442 | ,, | ம. விசுவாசம் லெம்பேட், பண்டிவிரிச்சான் |
| 443 | செல்வி | லாம்பஸ் மஸ்கிரின்ஞாஸ், கொழும்பு, 13 |
| 444 | ,, | ஜெயசீலி அந்தோனிப்பிள்ளை, சில்லாலை |
| 445 | செல்வன் | கொ. இம்மனுவேல் பேசி, கிளிநொச்சி |
| 446 | ,, | சாந்தி யோண், அம்பிட்டியா |
| 447 | செல்வி | ம. யசிந்தா ஜெயராணி, மாதகல் |
| 448 | ,, | ச. றெஜீனா அருள், முல்லைத்தீவு |
| 449 | செல்வன் | சி. ம. ஜெயரெட்ணம், எழுதுமட்டுவாள் |
| 450 | ,, | அ. அலோசியஸ், பெரிய பண்டிவிரிச்சான் |

## இவர்கள் இப்படி

அர்ச். அன்டிரோணிக்கஸ் — ஒரு நாவிதன்.
அர்ச். அலெக்சாந்தர் — விறகுதறிக்கும் கூலிக்காரன்.
அர்ச். உவில்பிறிட் — அப்பக்காரன்;
அர்ச். வாறுஸ் — மறியல்வீட்டுச்சேவகன்.
அர்ச். ஓடிறூன் — சாரதி.
அர்ச். ஓமொபோனோ — கடைக்காரன்.
அர்ச். அகத்தா — அடுக்களை வேலைக்காரி.
அர்ச். மார்த்தா — சமையற்காரி;
அர்ச். ஸிற்றா — வீட்டுப்பணிப் பெண்.
அர்ச். லூப்புஸ் — அடிமை.
அர்ச். லவுறேன்சியா — அடிமை.
அர்ச். சத்துர்னீனுஸ் — அடிமை
அர்ச். பெனடிற்குசை லாபர் — பிச்சைக்காரன்.

—தொகுப்பு: இ. பே.

## விருந்து 8

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | ப | த் | தா | ம் | ⊛ | ⊛ |
| 2 | ⊛ | | ன் | | ⊛ | ⊛ |
| 3 | ⊛ | | ப | | | ⊛ |
| 4 | | | க் | | ர | |
| 5 | | ன | ச் | | ட் | |
| 6 | | த் | | ம | | ⊛ |
| 7 | ⊛ | ⊛ | | உ | | வ |
| 8 | | ன் | | ல | | ⊛ |

1. அர்ச். 10-ம் பத்திநாதர் சிறுவர்களின் பாப்புஎன்ற சிறப்புப் பெயர் பெற்றவர்......

2. தேவநற்கருணை பெறுவதற்கு முன் .. ...... மணித்தியாலங்கள் என்கிலும் சரீரஉபவாசம் வேண்டும்......

3. வாடாதமாலை.

4. இரண்டு மனிதர்கள் செபம் பண்ணும்படி தேவாலயத்திற்குள் போனார்கள். அவர்களில் ஒருவன் பரிசேயன். மற்றவன்......?

5. நமக்குத் தெய்வம்போன்றது.

6. உண்மை பேசுபவன்......... ஆவான்.

7. கடைமாறிநிற்கும் தொழிலாளி.

8. பிறர்நலம் கருதுபவர்களுக்கு இது இருக்கக்கூடாது.

* * *

நிபந்தனைகள்:

- நிரப்பப்பட்ட பத்திரத்தைக் கத்தரித்து, அஞ்சல் அட்டையில் ஒட்டி, அண்ணாவின் முகவரிக்கு அனுப்பவேண்டும்;
- ஒருவர் ஒருகூப்பன் மாத்திரம் அனுப்பலாம்.
- முடிவு திகதி 27–6–64.

* * *

### சிறுவர்விருந்து அங்கத்தினர்

சிறுவர்விருந்தில் அங்கத்தினராகச் சேரவிரும்பும் 16 வயதிற் குட்பட்ட தம்பி, தங்கைகள் கீழ்வரும் பத்திரத்தைப் பூர்த்திசெய்து, அஞ்சல் அட்டையில் ஒட்டி, அண்ணா, சிறுவர் விருந்து, காவலன் அலுவலகம், தபா. பெ. இல. 2, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு எழுதவும்.

சிறுவர் விருந்து
அங்கத்தவர் மனுப்பத்திரம்
பெயர் செல்வன்/செல்வி .........
...........................................
முகவரி....................................
...........................................
பிற. திக. ..................................

## வாக்கோட்டை அர்ச். அந்தோனியார் திருப்பதி

இலங்கையின் பெயர்பெற்ற யாத்திரை ஸ்தலங்களுள் வாக்கோட்டை அர்ச். அந்தோனியாரின் யாத்திரை ஸ்தலமும் ஒன்றாகும். கத்தோலிக்க மக்கள் இப்புனித ஸ்தலத்திற்கு யாத்திரைசெய்வது மிகவும் இன்பந்தரும் என்பதில் சந்தேகமில்லை.

பரம்பரையாகக் கத்தோலிக்கமக்கள் சீவித்துவரும் வாக்கோட்டை யாகிய இக்கிராமம் கண்டிமேற்றிராசனத்தைச் சேர்ந்தது. டச்சுக்காரரின் வேதகலாபனையில் கத்தோலிக்கமக்கள் வாக்கோட்டையைத் தம் மறைவிடமாகக் கொண்டார்கள். வாஸ், கொன்சால்வெஸ் சுவாமிகள் வாக்கோட்டையில் தேவதொண்டாற்றினார்கள். வாக்கோட்டை முழுக்கிராமமும் மூவாயிரம் கத்தோலிக்கமக்களைக் கொண்டிருக்கிறது.

வாக்கோட்டை இலங்கையின் மத்தியில் இருக்கின்றது. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம், திரிகோணமலை, மட்டக்களப்பிற்குச் செல்லும் குருநாகல் பாதையில் மோட்டார் மூலம் பிரயாணம் செய்பவர்கள் கலேவலைப்பாதையால் வாக்கோட்டைக்கு வரலாம். கொழும்பிலிருந்து வாக்கோட்டை 84 மைல் தூரத்திலிருக்கிறது. கண்டியிலிருந்து வாக்கோட்டை 36மைல்தூரத்திலிருக்கிறது. கண்டியிலிருந்து பிரயாணம்செய்பவர்கள் மாத்தளை- கலேவலை பாதையின்மூலம் வாக்கோட்டையைத் தரிசிக்கலாம். வாக்கோட்டைக்கு அதிகம் அண்மையிலுள்ள புகையிரதஸ்தானம் 20மைல் தூரத்திலுள்ள மாத்தளையாகும்.

வாக்கோட்டையின் விலைமதித்தற்கரிய தொன்றாகக் கருதப்படுவது மரத்தினாற் செய்யப்பட்ட ஆறு அங்குல உயரமுள்ள பதுவைப்பதியரான அர்ச். அந்தோனியாரின் சுரூபமாகும். இப்புதுமையுள்ள சுரூபம் வாக்கோட்டைக்கு முதன்முதல் வந்தவர்களால் கொண்டுவரப்பட்டது. அர்ச். அந்தோனியார் வாக்கோட்டையின்மக்கள் வேதகலாபனைகள் மற்றும்துன்பங்களால் கஷ்டப்படும்பொழுது அவர்களின் பாதுகாவலராகவும், உதவிசெய்பவராகவும்இருந்து வந்தார். இக்கிராமத்தின் கத்தோலிக்கரின் விசுவாசத்தை உறுதி பெறச் செய்தவரும் அவரே. வேதகலாபனையில் கத்தோலிக்க தேவாலயங்கள் நிர்மூலமாக்கப்பட்டபொழுது அர்ச். அந்தோனியாரின் திருச்சுரூபத்தை வீடுகளில்வைத்துக் கத்தோலிக்க மக்கள் ஒருங்குசேர்ந்து செபம்செய்தார்கள். தற்பொழுது இப்புதுமையுள்ள திருச்சுரூபத்தைக் கத்தோலிக்கரும், மற்றும் சமயத்தவர்களும் தினமும் தரிசித்து வேண்டுதல் செய்கிறார்கள்.

வருடாவருடம் இத்தலத்திற்கு யாத்திரைசெய்பவர்களின் வசதிக்காக விசேட பிரயாணஒழுங்குகள் திருநாட்காலங்களில் செய்யப்படும். தங்குவதற்கு வசதியாகப் பலஅறைகள் ஒழுங்குசெய்யப் பட்டிருக்கின்றன. திருநாட்காலங்களில் தற்காலிக வீடுகள் அமைத்து யாத்திரிகர்களின் வசதிக்காக விடப்படும்.

— சகோதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசும் பேனா

## மரியன்னை அறிவகம் :

சிலவாரங்கட்கு முன்னால் இப்பகுதியில் பொறளை சகல அர்ச்சியசிட்டர்களின் ஆலயத்தில் நிறுவப்படவிருக்கும் மரியன்னை அறிவகம்பற்றிக் குறிப்பிட்டது நேயர்கட்கு நினைவிருக்கலாம். அண்மையில் இவ்வாலயத்துக்குச் சென்றிருந்தபோது ஆலயகட்டளைக்குரவர் தமது இப்புதியமுயற்சியை எனக்கு எடுத்துக்காட்டினார்.

## வண. ஹெரத்அடிகள் :

சகல அர்ச்சியசிட்டர்கள் ஆலயத்தில் சதாசகாயமாதா நோவனையைப் பதினொரு வருடங்கட்குமுன்னர் ஸ்தாபித்து இன்றுவரை சிறப்பாகநிர்வகித்து வருபவர் வண. ஹெரத்அடிகள். தேவதாயின் பக்தியைப் பரப்புவதில் தணியாத தாகம்கொண்டவர் இவர். இந்தப் பதினொருவருடத்தில் இங்கு எவ்வளவோ புதியதிட்டங்களையிட்டு, சிறப்பாக நிறைவேற்றி வருகின்றார். அண்மையில் இவர் நிறைவேற்றிய திட்டமே மரியன்னை அறிவகம் ஆகும்.

## தெரிந்துகொள்ளுங்கள் :

இந்தஅறிவகத்தின் முதலாவதுபகுதி படித்தறியும் பகுதி. இங்கு பெரிய நீண்ட அலமாரிகளில் அழகான புத்தகங்களை அலங்காரமாக அடுக்கிவைத்திருக்கிறார்கள். தேவமாதாவைப்பற்றி நீங்கள் அறியவேண்டுவது யாது? இந்த அறைக்குள் செல்லுங்கள், தெரிந்துகொள்வீர்கள். மரியன்னையின் வரலாறு பற்றிய நூல்கள் ஒருபுறம்; எங்கெங்கெல்லாம் தேவதாய் காட்சிகொடுத்தாவோ அந்தந்த விபரங்களையெல்லாம் தரும் புத்தகங்கள் மறுபுறம்; தேவமாதாவின் பெயரால் வெளியாகும் அழகழகான பத்திரிகைகள் இன்னொருபுறம்; தேவமாதா பக்திபற்றிய எழுத்தோவியங்கள் மற்றொருபுறம் என்றெல்லாம் இந்தப் பெரிய அறை அமர்க்களப்படுகின்றது.

## தமிழிலும் வேண்டும் :

பெரும்பான்மையான நூல்கள் ஆங்கிலத்திலேயே காணப்பட்டன. சிங்கள மொழியிலும் பலபுத்தகங்கள் இருக்கின்றன. தமிழ்நூல்களுக்கும் இடம் உண்டாஎன வினவினேன். "ஏன் இல்லை, தமிழ்நூல்களையும் சேர்க்கப் பாடுபடுகின்றேன். அதற்குத் தமிழ் பேசும் கத்தோலிக்க அன்பர்கள் உதவி செய்யவேண்டு"மென ஹெரத்அடிகள் குறிப்பிட்டார்.

## கண்டுகளியுங்கள் :

அடுத்தஅறைக்குச் செல்வோம். தேவதாயைப் பலகோணத்திலும் பல உருவங்களிலும் பார்த்துமகிழலாம் இந்தஅறையில். விவிதமுறையில் பலவிதநாட்டுக் கலாசாரங்கட்கிணங்க மரத்தில், கண்ணடியில், மாபிளில், பாரிஸ் பிளாஸ்ரரில், கருங்கல்லில், பிளாஸ்ரிக்கில் மரியன்னையின் சொரூபங்களைப் பார்க்கலாம். எத்தனையோ தேசங்களெல்லாம் மரியன்னையின் பலவித தோற்றங்களைத் தபால்தலைகளில் பொறித்திருக்கின்றன அல்லவா? அவையெல்லாம் ஒருபுறத்திலே. வரவணிக்கங்களில் தேவதாய் மறுபுறத்திலே. பலவர்ணத்தில் தேவதாயின் படங்கள். இத்தாலி, இங்கிலாந்து, அமெரிக்கா, பெல்ஜியம், பிரான்ஸ், ஜேர்மனி, சுவிச்சர்லாந்து என்றநாடுகளின் மிகச்சிறந்த அச்சகங்கள் உருவாக்கிய கண்கவர் வர்ணப்படங்கள் இவை.

## நீங்களும் உதவலாம் :

இப்படியே மரியன்னையின் அறிவை நாம் படித்தும், பார்த்தும் தெரிந்துகொள்ளும்முறையில் அதிகசிரமமெடுத்துக்கொண்டு அமைத்துள்ளார் ஹெரத் அடிகள். உங்கள் இல்லங்களிலும் தேவதாய்பற்றிய அபூர்வமானநூல்களை (சிறப்பாகத் தமிழ் நூல்கள்) வைத்துக் காப்பாற்றுகின்றீர்கள். பிறநாடுகளிலிருந்து நண்பர்கள்மூலம் கிடைத்த மரியன்னையின் படங்கள், தபால்தலைகள், உருவங்கள், வரவணிக்கங்கள் இருக்கும். இவற்றை மேற்படி குரவருக்கனுப்பினால் அவை பலரும் மரியன்னைபற்றிய சிறப்புகளை அறிந்துகொள்ள மிகமிக உதவியாயிருக்கும். இதுசம்பந்தமாக அன்பர்கள் :

கட்டளைக்குரவர்,<br>
சகல அர்ச்சியசிட்டர்கள் ஆலயம்,<br>
பொறளை, கொழும்பு

என்ற விலாசத்துடன் தொடர்புகொள்வார்களாக.

## இன்னிசைக் குழு :

மரியன்னை அறிவகத்தைப் பார்த்துக்கொண்டிருக்கையில் இன்னொருபகுதியில் இன்னிசையொன்று எழுந்துகொண்டிருந்தது. அதுபற்றி வினவியபோது ஹெரத்அடிகள் என்னை மற்றொருஅறைக்கு அழைத்துச்சென்றார். அங்கு சிலஇளைஞர்கள் மரியன்னைபுகழ்பாடும் கீதங்களை இராகம், தாளத்திற்கேற்ப பலவித வாத்தியங்களிலும் வாசித்துக் கொண்டிருந்தனர். இந்த இசைக்குழுவினர் நன்கு தேர்ச்சிபெற்றபின் சகாயமாதா நோவனைகளிலும், இடைநேரங்களிலும் இன்னிசைபரப்புவர்என அறிந்தேன். ஹெரத்அடிகளின் புதியதிட்டங்களில் இதுவுமொன்று.

## தாகம் தணிப்பர் :

சதாசகாய நாயகியின் சந்நிதானத்தைநாடி மிகத்தொலைவிலிருந்தெல்லாம் பக்தர்கள் பொறளை ஆலயத்துக்கு வந்து சேர்கின்றார்கள் அல்லவா. இவர்கள் இளைப்பாலும், களைப்பாலும், தாகத்தாலும் தவிக்கும்போது தேனீர்க்கடைகளைநாடி மீண்டும் சிலதூரம் நடந்துசெல்லவேண்டிய நிர்ப்பந்தமிருந்தது. இதைத்தவிர்க்க ஆலயத்தின் பக்கமாகத் தற்போதுள்ள செபமாலைக்கடையையொட்டிப் பானச்சாலை ஒன்று நிறுவப்படும்என ஹெரத்அடிகளார் கூறினார். இங்கு தேனீர், காப்பி, மற்றும் குளிர்பானங்கள் மலிந்தவிலைக்கு விற்கப்படும் எனவும் குறிப்பிட்டார். உண்மையில் இம்முயற்சி வரவேற்கத்தக்கதொன்று.

## கனத்தை வீதியில் :

சதாசகாய மாதா சந்நிதானத்திலிருந்து புறப்பட்டுக் கனத்தைவீதியினூடாகச் சென்றேன். கனத்தைவீதி என்றதும் நேயர்களுக்குக் கொழும்பின் மிகப்பெரிய சேமக்காலைகள் அந்தவீதியில்தான் அமைந்திருக்கின்றன என்பது நினைவுக்குவரும். ஆயினும் யான்சென்றது அவ்வீதியிலுள்ள அந்தோனியார் ஆச்சிரமத்துக்கே. இந்த ஆச்சிரமத்தில் பிரான்சிஸ்கன்சபைக் கன்னியர்கள் வதிகின்றார்கள்.

## கைத்தொழில் :

கொழும்பு அதிமேற்றிராசன பங்குகட்குத் தேவையான ஓஸ்திஅப்பங்களைத் தயாரித்தல், அழகழகாக வர்ணவேலைப்பாடுகளுடன் குருத்துவஅங்கிகளை உருவாக்குதல்என்பன இவர்களின் பணிகள். இவ்வலுவல்களில் இவர்கள்நீண்டகால அனுபவம்பெற்றவர்கள்.

## கோர்ப்புஸ் கிறிஸ்ரி :

அந்தமடத்தின் சிற்றாலயத்துக்குச் சென்றபோது வாயிலில்தொங்கிய அறிவித்தல்அட்டை என்னைக்கவர்ந்தது. தேவநற்கருணையை வழங்குமுன் குருவானவர் கோர்ப்புஸ் கிறிஸ்ரி (கிறீஸ்துவின் சரீரமே)என உச்சரிப்பார். விசுவாசிகள் ஆமென்என விடையளித்த பின்னரே தேவநற்கருணையை அருந்துதல்வேண்டும்என அந்தஅட்டை கூறியது. இது அண்மையில் பரிசுத்தபாப்பாசர் தேவநற்கருணை பெறுவது சம்பந்தமாகச்செய்த புதியமாறுதலாகும். இதன்மூலம் தேவநற்கருணை பெறும்போது குருவானவரது வேண்டுதலில் நற்கருணைபெறும் விசுவாசியும் உண்மையான பங்குபெறுபவர் ஆகின்றார்.

## நித்திய ஆராதனை :

புறக்கோட்டையிலுள்ள பிலிப்புநேரியார் ஆலயத்திற்போல இங்கும் திவ்விய சற்பிரசாதத்தை எழுந்தேற்றம் செய்து இரவுபகலாக மனுக்குலத்தோரின் நிந்தைகட்குப் பரிகாரம்செய்து வருகின்றார்கள். கன்னியர்கள் மாறிமாறிப் பீடத்தடியில் முழந்தாளிட்ட வண்ணம் ஆராதனை நடாத்துவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

---

## வாழ்வாங்கு வாழ...5

# உரையாடல் நம் உளம்காட்டும்

ஏ. பி. வி. கோமஸ்

அர்ச். அருளப்பரின் சுவிசேஷத்தை எடுத்து, அப்படியே ஏழாம் அத்தியாயத்தைப் புரட்டினால், நாற்பத்தேழாம் வசனம் என்னவென்று தெரியுமா?

"இந்த மனிதனைப்போல ஒருபோதும் எவனும் பேசினதில்லை" என்றார்கள் சேவகர்கள்.

ஏதோ பெருவிழா நடத்திப் பொன்னாடை போர்த்திவிட்டுப் பேசிய பேச்சல்ல இது. எதிரிகளால் எடுத்துக்கூறப்பட்ட "பொன்மொழி"தான் இது. யாரைப்பற்றியென்று நான் கூறவும் வேண்டுமா? இல்லையே. நம்முடைய நாதரைப் பிடித்துக்கொண்டுவரச் சென்ற சேவகர்கள், தங்கள் பெரியார்களாகிய ஆசாரியரிடத்திலும், பரிசேயரிடத்திலும் சொல்லிய மறுமொழிதான் இது. விருப்பம் இல்லாமல் சொன்னாலும் உண்மையைத்தானே சொன்னார்கள்.

எனில், மற்றவருடன் உரையாடும்போது மாசற்றவர்களாக, வரம்பெற்றவர்களாக நீங்கள் ஆகவேண்டுமா? அப்படியெனில் கிறிஸ்துவின் வார்த்தைகளாகிய நல்லமுதம் பொழியும்போது அவ்வமுதை அள்ளிப் பருகுங்கள்; ஆமாம், அவரின் வார்த்தைகளை வாசியுங்கள், திரும்பத்திரும்ப வாசியுங்கள். ஏன், மனப்பாடம் பண்ணுங்களேன். அதில் என்ன நட்டம்; "அவருடைய வாக்கியம் அதிகாரம் பெற்றதாகஇருந்தது" (லூக். 4 : 32). நல்லவர்களும் பொல்லாதவரும், நள்ளிரவிலும் நண்பகலிலும், கரையோரத்திலும் கட்டிடங்களிலும் யேசுவைப் புடைசூழ, நடுநாயகமாய் யேசு அமர்ந்து, அவர்களுக்குப் போதித்தபோது அவர் பாவித்த வார்த்தைகளைப் படித்துப் பாருங்கள். பாராயணம் செய்யுங்கள்.

இதமான சொற்கள், இனிமையான வார்த்தைகள், இடர்வரும் என்றால் எச்சரிக்கும் நற்சொற்கள், எதிரிகளுக்கு ஏற்றபதில்கள், ஆணித்தரமான கேள்விகள், அழகான உவமைகள், அருமையான எடுத்துக்காட்டுக்கள். உண்மையான உரையாடலுக்குவேண்டும் நல்ல தொனி; ஊடுருவிப் பார்க்கும் ஆனால், அன்பும் அருளும் நிறைந்த கண்கள்; உண்மையும் உத்தமுமான எண்ணக்கருத்துக்கள்; ஆழ்ந்த சிந்தனை; தெளிந்த நீரோடைபோன்ற தெள்ளிய நடை; சந்தர்ப்பத்துக்கும் சமயத்துக்கும் தேவைப்படும் தொனியின் நுண்மை எல்லாம் கொண்டிருந்தார் நம்நாதர். மனிதனாகிய தேவன் அல்லவா அவர். நாம் மனிதர்; ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், அவர் காட்டிய பாதையில் முயன்றால் செல்லமுடியாதா? நம்மால் முடியுந்தானே.

யேசுக்கிறிஸ்து தம்இதயத்திலிருந்து பேசினார்; இன்னொரு இதயத்துக்குப் பேசினார். நாமும் அவ்வாறே பேசவேண்டும். முடியாதா என்ன? அவரால் மனித இதயத்தைக் கண்டறிய முடிந்தது; உண்மை. ஆனால், உண்மையான பயிற்சியினால் நம்மாலும் அடுத்தவன் மனதை அறிந்துகொள்ள முடியாதா என்ன? அப்படியான பயிற்சியால் அடுத்தவர்மனதை நாம் அறிந்தால், அவர்பால் அன்பும் அருளும் கொண்டால், உதவியளிக்கும் உள்ளத்துடன் நெருங்கிப் பேசினால் நம் உரையாடலும் உயர்ச்சியடையாதா? அடையுமே.

யேசு என்னதான் பேசினார்? சாதாரணவிடயங்கள்தான். சாதாரண மக்களிடம், "என்ன மீன் பிடித்தீர்களா?" என்று கேட்டார்; "இவ்வளவு பேருக்கு வேண்டிய மாமிசம் இருக்கிறதா?" என்று விசாரித்தார்; "ஒருதாயால் தன் பிள்ளையை மறந்துவிட முடியுமா?" என்று கூறினார். இவைபோன்றவைதானே அவர் பேசியவை. நாமும் இன்றும்தான் பேசுகிறோம். ஆனால், பேசும் முறை! அதைத்தான் நாம் பழகிக்கொள்ள வேண்டும்.

மேலும், மற்றவர்கள் பேசும்போது மகிழ்ச்சியுடன் கேட்டுக்கொண்டிருந்தார். நல்லமுறையில் கேட்டிருந்து, நன்றாகச் சிந்தித்துவிட்டே பின் பதில் கூறினார். இது உரையாடலின் உண்மையான இரகசியம் அல்லவா. மற்றவர் சொல்வதை மகிழ்ச்சியுடன் கேட்க வேண்டும், மறுமொழி சொல்லவேண்டிய நேரத்தில் சொல்லவேண்டும். ஆமாம், ஓர் இதயத்தையறிந்து, அவ்விதயத்துக்கு நம்மிதயத்திலிருந்து பேசவேண்டும். அங்கே, அப்பொழுதுதான் உண்மையான, நன்மையான உரையாடல் பிறக்கும்.

ஆகையால் நல்லமுறையில் நாம் உரையாட, உள்ளத்தில் உள்ளதை உண்மையுடன் வெளியிட நம்நாதரின் வாழ்க்கையும், நல்ல நம் விவிலியமும் நமக்கு என்றும் துணையிருக்குமே. ஆக, விவிலியத்தை விடாது வாசித்து வாழ்வாங்கு வாழும் முறைகளை அறிவோமே.

---

✝

திருமதி<br>
மேரி நீற்று ருணி யோண் அல்பிறெற்<br>
அமரத்துவமடைந்த

### 2-ம் வருட ஞாபகம்

| பிறப்பு : | இறப்பு : |
|---|---|
| 1-8-1933 | 9-6-1962 |

எனது பிரியமனைவி திருமதி நீற்றுருணி (யோண் அல்பிறெற்) அவர்கள் மரணத்திரையினுள் மறைந்ததினமாகிய 9-6-64 செவ்வாய்க்கிழமை அவவின் ஆத்தும இளைப்பாற்றிக்காக ஊர்காவற்றுறை அர்ச். அந்தோனியார் தேவாலயத்தில் துக்கப்பாடற்பூசை நிறைவேறும். இவவின் ஆத்தும இளைப்பாற்றிக்காக மன்றாடும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

செபம்

நித்திய பிதாவே! உமது திருக்குமாரனின் விலைமதியாத திருஇரத்தத்தைப் பார்த்து, உத்தரிக்கிற ஆத்துமாக்கள் பேரில் இரக்கமாயிரும்.

இவரின் பிரிவால் துன்புறும்<br>
கணவர்<br>
யோண் அல்பிறெற் சிங்கராயர்<br>
சேச மைந்தன்<br>
அன்ரனி கிறகோரி டொறிங்ரன் சிங்கராயர்<br>
பெற்றோர்<br>
மனவல்தம்பி, சேர்மெனி.<br>
சகோதரர்<br>
திருமதி அக்கினேஸ்சேவியர்,<br>
செல்வி ரேஸ் வினிவிறேற் மேசி.

உதயநிசை, ஊர்காவற்றுறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருளும் உலகிலே

### வளமிக்க மேற்றிராசனம்

அகில உலகிலுமுள்ள கத்தோலிக்க மேற்றிராசனங்களுள் அதிக வளமிக்கதும், செல்வம் படைத்ததும் எனப் பெயர்பெறுவது நியூயோர்க் மேற்றிராசனம் ஆகும். அதன் ஆயர் கர்தினல் ஸ்பெல்மன் ஆண்டகை. அண்மையில் தம் அதிமேற்றிராணித்துவ வெள்ளி விழாவைக் கொண்டாடினர். கம்பீரமான பருத்த, ஆயின் குள்ளமான தோற்றம் இவருடையது. அவர் கண்களிலே ஒரு தனிக்கவர்ச்சி. 1,782,000 கத்தோலிக்கர்களேயும் ஏராளமான குருக்கள், கன்னியர்களேயும், சில துணை ஆயர்களேயும் கொண்ட இப்பெரிய அதிமேற்றிராசனத்தை வெகு திறமையுடன் நிர்வகித்து வருகிறுர்.

## 1939—1964

1939-ல் பன்னிரண்டாம் பத்திநாத தந்தை இவரை நியூயோர்க் அதிமேற்றிராணியாராக நியமித்தார். அதன் பின்னுல் வளர்ந்துவரும் தம் திருச்சபைக்காக 37 பெரிய ஆலயங்கள், 130 உயர்தா கல்லூரிகள், 5 மருத்துவ மனேகளேயும் (Hospitals) நிறுவி நிர்வகித்து வருகிறுர். உலகின் பல பாகங்களிலும் இன்னல்கள் ஏற்படும் வேளேகளில் தம் மேற்றிராசன விசுவாசிகளிடமிருந்து பொருள்சேர்த்து லட்சக்கணக்கில் நன்கொடையளித்து வருகிறுர். சில வருடங்களின்முன் இலங்கை பெருவெள்ளத்தினுல் அவதிப்பட்டபோது நியூயோர்க் அதிமேற்றிராசன சார்பில் ஸ்பெல்மன் ஆண்டகை பல லட்சம் ரூபாய்களே இலங்கைக்கு அனுப்பி உதவியது நேயர்கட்கு நினேவிருக்கலாம்.

### செல்வாக்கு நிரம்பியவர்

ரூேமன் கத்தோலிக்க திருச்சபையில் தனிச்செல்வாக்குப் பெற்றவர் இவர். பாப்புவுக்கு அடுத்தபடியாக இவரது குரலே ஒலிக்கிறது என்ருெருபத்திரிகை அண்மையில் பாராட்டியது. பன்னிரண்டாம் பத்திநாதர், 23-ம் அருளப்பர், 6-வது சின்னப்ப பாப்புமார்கள் அமெரிக்க திருச்சபை சம்பந்தமாக எந்த அலுவலிலும் ஒரு முடிவுக்கு வருமுன்னர் இவரைக் கலந்தாலோசிக்கத் தவறியதேயில்லே. அருளப்ப பாப்புவிடமும், சின்னப்ப தந்தையிடமும் இவருக்குள்ள செல்வாக்குக் காரணமாகவே விலே மதிக்கப்பட்ட, 400 வருடங்களாக இடம் பெயராத மைக்கல் ஆஞ்சிலோவின் வியாகுலத்தாயை ரோமையிலிருந்து அமெரிக்கா கொண்டுசெல்ல முடிந்தது.

### அமெரிக்காவின் தனிமதிப்பு

அமெரிக்க தலேவர்கள், அரசியற் கட்சிகள் இவருக்குத் தனிமதிப்புத் தருகின்றன. ஜனுதிபதி தேர்தலுக்கு முன்னுல் இருகட்சி அபேட்சகர்களேயும் அழைத்து விருந்தளித்து ஒருவரை மற்றவர் கொள்கையால் மட்டுமே எதிர்க்க வழிவகுத்து அனுப்புவதைப் பலவருடங்களாக மேற்கொண்டுள்ளார். பன்னிரண்டாம் பத்திநாதர் மரித்தவேளே கருதினுலாண்டகை யாத்திரிகர் குழு ஒன்றுடன் விசேட கப்பலில் லூர்துபதியிலிருந்து அமெரிக்கா திரும்பிக் கொண்டிருந்தார். செய்திகேட்டதும் ரோமைக்கு எப்படிச் செல்வது என அவர் சிந்திக்கு முன்னரே அமெரிக்க ஜனுதிபதி ஐசன்கோவர் செயலாற்றினுர். அரசாங்க கெலிக்கோப்டர் விமானமொன்று கப்பலுக்கு வந்தது. ஆண்டகையைச் சுமந்துசென்று மற்றொரு போர்க்கப்பலில் இறக்கியது. அக்கப்பலில் காத்திருந்த விமானமூலம் செய்திகேட்ட சில மணித்தியாலங்களுள் ரோமை சென்ருர் ஸ்பெல்மன் ஆண்டகை.

### நத்தால் நவயாத்திரை

ஒவ்வொரு வருடமும் நத்தால் காலத்தில் அவர் நியூயோர்க்கில் தங்குவதில்லே. விமானமொன்றில் புறப்பட்டு உலகின் பலபாகங்களிலும் உள்ள அமெரிக்க போர்வீரர்களேச் சந்திப்பார். அவர் குறைகளேக் கேட்பார். கத்தோலிக்க வீரர்கட்கு தேவதிரவிய அனுமானங்களேத் தருவார். பரிசுத்த பாப்பரசரின் சார்பாக உலகமடங்கிலுமுள்ள கத்தோலிக்க இராணுவவீரரின் ஆன்மகுருவாகவும் கடமையாற்றுகின்ருர்.

### திருச்சபையின் பொருளாளர்

சத்தியதிருச்சபையின் மிகப்பெரிய தர்ம முயற்சிகளேயெல்லாம் நிர்வகிப்பது அவரது மற்ருெரு அலுவல். கஷ்டப்படும் மேற்றிராசனங்கட்கெல்லாம் பொருளுதவி தருவார். கத்தோலிக்க நிவாரண சேவா இயக்கத்தின் தலேவர் அவர். அரசியல், காலநிலே, போர் முதலாம் காரணங்களால் அகதிகளாக அவதியுறுவோருக்கு இவ்வியக்கம் பெருமளவில் உதவிவருகிறது. தற்போது 79 நாடுகளில் இந்த இயக்க சேவை நடைபெறுகின்றது. வத்திக்கான் நிர்வாகத்துக்கும் பணமுடை ஏற்படும்போது, எப்பாடுபட்டாவது பொருள்திரட்டித்தா கர்தினுலாண்டகை பின்வாங்குவதில்லே. அவருடைய உதவிகளுலெல்லாம் தலேயானது வத்திக்கான் பொதுச்சங்க நிர்வாகநிதிக்காகப் பத்துலட்சம் டாலர்களே (சுமார் 50 லட்சம் ரூபாய்) திரட்டிக்கொடுத்தமையாகும்.

### திடம்வாய்ந்த எதிர்ப்பாளர்

கத்தோலிக்கத்துக்கு எதிர்களாள் தீங்கு ஏற்படும்போது தம் சக்தியை ஒன்றுதிரட்டிப் பலமாக எதிர்ப்புத் தருவார். கத்தோலிக்க பாடசாலேகட்கு அரசாங்க உதவிதேவை என்பதற்காக அவர் நடாத்தும் போராட்டம் பிரசித்திபெற்றது. (The Deputy) என்ற ஜெர்மானிய நாடகம் (பன்னிரண்டாம் பத்திநாதரின் கொள்கைகளே கேலிசெய்யும் நாடகம்) நியூயோர்க்கில் பெரும் ஆரவாரத்துடன் ஆரம்பமாகியதெனினும் கர்தினுலாண்டகையின் பெரும் எதிர்ப்புகளேச் சமாளிக்க இயலாது இரு ஆட்டங்களின்பின்னுல் கைவிடப்பட்டது. நீக்ரோ மக்கள் சம உரிமைகோரி நடாத்தும் அறப்போருக்கும் ஆண்டகை பெருமளவில் ஆதரவளித்து வருகின்ருர்.

### அமெரிக்க பிரமுகர்

அமெரிக்காவின் சக்திவாய்ந்த பிரமுகர்களில் ஒருவராகக் கர்தினுலாண்டகை கருதப்படுகின்ருர் அமெரிக்காவின் மிகப்பெரிய வைபவங்களனேத்துக்குமே அவரைக்கௌரவ விருந்தினராக அழைக்கின்றனர். அவரது புரட்சிக் கொள்கைகளும் மனித உரிமைகள் பற்றிய அவாவும், உயர்வு, தாழ்வு என்ற பேதமின்றி யாவருடனும் கலந்துரையாடும் தன்மையும் மக்கள் மத்தியில் அவரை மிகப் பெரும் மனிதராக்கியுள்ளன.

75வயது நிரம்பிய கர்தினல் ஸ்பெல்மன் ஆண்டகை நீடூழிவாழ்க. திருச்சபைக்கும், மனிதகுலத்துக்கும் அவர் சேவை மென்மேலும் வளர்ந்தோங்குக.

---

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

பரி. சதாசகாயமாதாவினதும், அர்ச். யூதாததேயுவினதும் புதுமையினுல் எங்கட்கு ஒருபெண்குழந்தை பிறந்திருக்கிறது. தாயே, வருங்குமாதீம் வரஇருக்குங் கவலேயைத் தீர்ப்பீர்என்ற நம்பிக்கையுடன் எங்கள்குடும்பம் முழுவதும் தங்களே வேண்டுகின்ருேம்.

ஒரு பக்தன்

மாரீசன்பதி

## மூவருக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் கொடுக்க ஆராய்ச்சிகள்

ஸ்பெயின் நாட்டில் 1848-ம் ஆண்டில் பிறந்த மிகவர். எஸெக்கியல் மேரேனே டையாஸ் ஆண்டகை, நேப்பிள்ஸ் நகரில் 1894-ம் ஆண்டில் பிறந்த சகோதரி (சிலுவையிலறையுண்ட யேசுவின்) மரிஜோசபின் லிபானன் நாட்டில் 1928-ம் ஆண்டில் பிறந்த மரோனேட் சந்நியாசியார் ஷெர்பெல் மாக்கலுவ் என்ற மூவருக்கும் முத்திப்பேறுபட்டம் அளிக்கும் கருத்தோடு வத்திக்கான் திருச்சடங்குகளின்சங்கம் ஆராய்ச்சிகள் நடத்திவருவதாகத் தெரிகிறது.

---

## அமைதியின் ஆக்கம் அன்னேயின்.......

இன்றைய இருபதாம் நூற்ருண்டில் இப்பாருலகில் எப்பக்கம் நோக்கினுலும் அமைதியின்றி மக்கள் அல்லலுற்று அவதிப்படுவதை அவதானிக்கிரூேம்.

இத்தகைய இழிநிலேயில் எமது திருச்சபை என்னும் திருப்பெருந்தாய் அமைதியை அகிலமனேத்தும் நிலேநாட்ட எம்மனேவோரையும் அறைகூவி அழைக்கின்ருள். அன்னேயர் அனேவரும் அவ்வறைகூவலுக்குச் செவிசாய்ப்பது கடனுகும். அகில அமைதியின் ஆக்கம் அன்னேயரின் அன்புக்கரங்களிலேயே அடங்கியிருக்கின்றது. ஏனெனில் குடும்பங்களின் குழப்ப நிலேயே இன்று குவலயமெங்கும் அமைதியின்மையை ஏற்படுத்தியுள்ளது. இக்குடும்பங்களின் குழப்ப நிலேக்கு அச்சாணியாய் அமைந்திருப்பவள் அன்னே. கத்தோலிக்க அன்னேயரின் கடவுட்பற்றற்றகடமை குறைந்த காரியங்களே இல்லங்களில் இழிநிலேயை ஏற்படுத்தியுள்ளதெனக் கூற வேண்டும். ஒரு கிறிஸ்தவ அன்னே அனேத்திலும் அன்னேமரியின் அற்புதக்கடமைகளேக் கண்டு பாவிக்கவேண்டும். நசரேத்குடிசையில் நன்ருக வாழ்ந்த மாமரித்தாய் தனது நாவினுல் நயவஞ்சகப்பேச்சுக்களேப் பேசியதில்லே. ஆனுல், அவளின் அடிச்சுவட்டைப் பின்பற்றும் நம்மன்னேயர் குலம் நாள்முழுவதும் நயவஞ்சகமான, பிறர்சிநேகமற்ற, விபரீத விளக்கமளிக்கும் வீணுன வார்த்தைகளே வார்த்தையாடி வம்பளந்து குடும்பங்களில், அயலவர்களிடையில் பிரிவினேயையுண்டுபண்ணுவதில் தமது நாவைப் பயன்படுத்துவதுகண்டு வருந்தாமலிருக்க முடியாது. "நாவில் எலும்புகள் கிடையா, ஆனுல், அது எலும்புகளே நொறுக்குகிறது" என ஒருஞானி கூறியதுபோல் நமது இன்றைய கத்தோலிக்க அன்னேயரும் தமது நாவினுல் நயவஞ்சக நாசச்செயல்களேப்புரிந்து நாடெங்கும் அமைதியை அழிக்கின்றனர். அன்புள்ள அனனேயரே அழிவுறும் உடலின்பத்திற்காக உலகின் அமைதியை அழித்தொழிக்கும் சக்திபடைத்த தீய பேச்சுக்களேப் பேசுவதில் நாவையுபயோகிக்காதிருக்கவேண்டும். அழிவுறும் அகிலத்தில் அமைதியை நிலேநாட்ட அன்னே திருச்சபையின் அறைகூவலுக்கிரங்கிக் குடும்பங்களில் குடிமக்களிடையில், குவலயத்தில் தூயஅன்புள்ள அரிய அமைதி, பொறுமையை, பிறர்சிநேகத்தையுண்டுபண்ணும் வார்த்தைகளேப் பேசுவதில் நாவை உபயோகிக்கவேண்டும்.

மௌனமே மங்கையருக்கு
மேன்மையான மணி ஆரம்,
ஆனுல், அணிந்தால் அல்லவோ?

திருமதி சந்தியாப்பிள்ளே சூசானு
பரமபதமடைந்த

## முதல் வருட ஞாபகம்

எங்கள் அருமைத்தாயார் திருமதி சந்தியாப்பிள்ளே சூசானு அவர்கள் பரமபதமடைந்த 1-ம் வருடம் 10 - 6 - 64 புதன்கிழமை பூர்த்தியாகின்றது. அத்தினத்தில் அவளின் ஆன்ம சாந்திக்காக சில்லாலே கதிரை மாதா ஆலயத்தில் ஒரு துக்கப்பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதைக் கண்ணுறும் வண. குருப்பிரசாதிகளேயும், சந்நியாசிகளேயும், சங். கன்னியர்களேயும், விசுவாசிகளேயும் அவளின் ஆன்ம இளேப்பாற்றிக்காக மன்ருடும் படி தயவாகக் கேட்கிருேம்.

"நித்திய பிதாவே! மரித்த உமது அடியாளாகிய சூசானுவின் ஆத்துமத்திற்கு நித்திய சம்பாவனேயை அளித்தருளும்."

பிள்ளேகள்:
வண. பிதா
எஸ் என். அருள்நேசன், ஓ. எம். ஐ.
ச. ஆரோக்கியநாதர்
சில்லாலே.

---

திருமதி மாரிமுத்து காணிக்கைமேரி
இறைவனடி சேர்ந்த

## முதலாண்டு நினேவு

**மறைவு: 7- 6- 63**

"சருவேசுரா! இரக்கங்களின் ஆண்டவரே! மரித்தவருடாந்த நாளே நாங்கள் ஞாபகம் செய்கிறஉமது அடியாளாகிய இவ்ஆத்துமத்துக்கு இளேப்பாற்றியின் இடத்தையும் சமாதானத்தின் பாக்கியத்தையும் மகிமையின் ஒளியையும் கட்டளே இட்டருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்து சாந்துவின் ஐக்கியத்தில் ஆமென்."

எம் உள்ளமெல்லாம். நீக்கமறநிறைந்திள்ள எம் அன்னேயார் எமைவிட்டுப் பிரிந்த முதலாண்டு 7- 6- 64 ல் நிறைவுறுவதால் இதைக் கண்ணுறும் யாவரும் இவ்வாத்துமத்துக்காக வேண்டிக்கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்ளும்,

மக்கள், மருமக்கள், பேரர்.

பாத்திமாகிரி வீதி,
மட்டக்களப்பு.

---

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

குடும்ப சமாதானத்தை இழந்து, நம்பிக்கையற்றுக் கலங்கும் சங்கடமான வேளேயில் யேசுக்கிறீஸ்துநாதருடைய சகோதரரான அர்ச். யூதாததேயுவின் இரக்கத்தைக்கேட்டு மன்ருடினேன். இந்த ஆபத்தான நேரத்தில் கருணேயுடன் கைதந்து உதவிபுரிந்த அர்ச். யூதாததேயுவின் நாமம் எங்கும் புகழப்படுவதாக.

யோ. கி.

---

### நன்றியறிதல்

தொடர்ந்து ஒரு மாசம் யேசுவின்திரு இருதயத்துக்கு விசேஷ ஆராதனே செலுத்தி அவரிடம் ஓர் உதவியை இரந்து மன்ருடி வந்தேன். அற்புதமான விதமாக நான் கேட்டஉதவி கிடைத்தது. நேர்த்தியின்படி பிரசுரிக்கின்றேன். தாமதத்துக்கு மன்னிப்புக் கோருகின்றேன்.

ஓர் அடியான்

---

● 23-ம் அருளப்ப பாப்பரசரின் சினிமாப்படம் தயாரிக்கப்படுகின்றது.

● அயர்லாந்துதேசத்தில் இவ்வருடம் 94 9சதவீதம் கத்தோலிக்கரென மதிப்பிடப்பட்டிருக்கின்றது. சனத்தொகை 26,73,473 பேர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச் செய்திகள்

## தேசிய குருமடத்தின் பழையமாணவ குருப்பிரசாதிகள்

அம்பிற்றியாவிலுள்ள இலங்கைத் தேசியகுருமடத்தின் பழையமாணவ குருப்பிரசாதிகள் நாடுமுழுவதிலுமிருந்துபோய் நிகழும்ஆனிமாதம் 8-ந் திகதி திங்கட்கிழமை அங்கு முதன்முறையாக ஒன்றுகூடவிருக்கிறார்கள். அதனால் அன்றுதினம் அங்கு பெருந்தொகையான குருப்பிரசாதிகள் சமுகமாவார்களென எதிர்பார்க்கப்படுகிறது. அங்ஙனம் ஒன்றுகூடுவதானது, தேசியகுருமடம் 1955-ம்ஆண்டு ஸ்தாபகமான காலமுதல் அதன்பிரஸ்தாபம் பெற்றதலைவராக விளங்கித் தம்முடைய பதவியிலிருந்து இளைப்பாறுகின்ற வண. எவ் சக்கெற், O. M. I. சுவாமிகளுக்குப் பிரியாவிடைகூறும் ஒருசந்தர்ப்பத்தையும் அளிப்பதாயிருக்கும்.

## அப்போஸ்தலிக்க கார்மேல்சபை நவகன்னியர்கள்

மங்களூரிலுள்ள அப்போஸ்தலிக்க கார்மேல்சபை நவகன்னியர்மடத்திலே சென்றவைகாசிமாதம்4-ந்திகதியன்று நவகன்னியர்க்குரிய சபை உடைதரிக்கும் திருச்சடங்கில் பதினொரு இலங்கைப்பெண்மணிகளும் கலந்துகொண்டார்கள். மகாவந். ஆர். டி. மெல்லோஆண்டகை திருச்சடங்கை நிறைவேற்றிவைத்தார். குறித்த பதினொருவாதும் நாமங்கள்வருமாறு : 1. நீற்ரு வஸ்தியாம்பிள்ளை, 2. மேரி றெஜினு யோசெவ், 3. மேரி திரேஸ் இராணி, 4. பிலோமினு ஜேக்கப், 5. மேரி செசிலியா மாசில்மாமணி, 6. ஹில்டா பியன்விலா, 7. ஹயசின்த் பெறேரு, 8. எட்னு குணவர்த்தன, 9. சித்திரா டிசில்வா, 10. லூஸியா ஹாமி, 11. ஹெலென் பெறேரு.

## பிரதம புத்தகுரு அறை கூவுகின்ருர்

கம்யூனிஸ்தர்களைஎதிர்த்துப் போராடுமாறு களத்தில் இறங்குவதற்கு மல்வத்தை மகாநாயகதெரோவான கனம். அமுனுகம இராசகுரு விபாஸி அவர்கள் பகிரங்கமாக முடிவுசெய்திருக்கின்ருர். "கம்யூனிஸ்தாராலே புத்தசமயத்திற்கு ஏற்படக்கூடிய அபாயங்களை நான்முற்ருக அறிந்திருந்தபோதிலும் கடந்தகாலத்திலே அரசியல்விஷயமாய் எந்தவிதமான அபிப்பிராயங்களையும் தெரிவிப்பதுபற்றிச் சற்றேதயங்கி மௌனமாயிருந்தேன். ஆனல், இப்போது என் மௌனத்தைக் கலைக்கத் தீர்மானித்துவிட்டேன். புத்தசமயத்துக்குக் கம்யூனிஸத்திலே இயல்பாய்அமைந்துள்ள பேராபத்துக்களைப்பற்றி நான் மக்களுக்கு எடுத்துச்சொல்வேன். செல்வந்தர்களின் கைகளிலிருந்து அதிகாரத்தைஎடுப்பதுமாத்திரமே தங்கள் நோக்கமென்று கம்யூனிஸ்தர்கள் பறைசாற்றுகின்ருர்கள். இந்தஅதிகாரத்தை எடுத்து யாருக்குமாற்றஅவர்கள் விரும்புகிருர்கள். பிச்சைக்காரருக்கா? இலங்கையைப் பிச்சைக்காரரின் ஒருநாடாக்குவதுதான் அவர்களின்நோக்கமா? இலங்கை ஏற்கனவே பிச்சைக்காரரின் ஒருநாடாகிவிட்டது. அரசாங்கத்திலே கம்யூனிஸ்தர்களைச் சேர்ந்துகொள்ளச் செய்வதற்கான அரசாங்கத்தின் இயக்கத்தை நான்கண்டிப்பாக எதிர்க்கின்றேன். அதுநிகழ்ந்தால் கம்யூனிஸ்தர்கள் நிச்சயமாகவே அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொள்வார்கள். இது புத்தசமயத்திற்குப் பேராபத்தாகும். நாட்டில் யாதேனும்ஆபத்து நேரும்பட்சத்தில் பிரதமரைப்போலும் செல்வமும், செல்வாக்கும்படைத்த ஆட்கள் பிறநாடுகளுக்கு ஓடித்தப்பமுடியும். ஆனல், அவ்வாறில்லாத அதிட்டங்குறைந்தமக்கள் எங்கேபோகமுடியும்?" என்று அவர்கூறியிருக்கிருர்.

## காங்கேசன்துறைத் துறைமுகம்

காங்கேசன்துறைத் துறைமுக அபிவிருத்திவேலை இருவருடங்களின்பின் திரும்பவும் ஆரம்பமாகும்போலிருக்கிறது. இதுவிஷயமாய்த் தற்போதையநிலைமையை அறிந்துகொள்ளுமாறு பிரதமர் ஓருமகாநாடு கூட்டவிருக்கின்ருர். ஏற்கனவே துறைமுக விஸ்தரிப்பு வேலைக்கென்று ஒதுக்கப்பட்டிருந்த இரண்டுஇலட்சம்ரூபாவும் அவ்வேலை திடீரென நிறுத்தப்பட்டகாரணமாக உபயோகிக்கப்படவில்லை. காங்கேசன்துறைத் துறைமுக விஸ்தரிப்புத்திட்டமானது கொழும்புத்துறைமுகத்திலே கப்பல்களின்நெருக்கடியைக் குறைக்குமாறும், காலியிலிருந்து உடைபட்ட சுண்ணக்கற்களைச் செலவுச்சுருக்கமாகக் கடல்மார்க்கமாகக் காங்கேசன்துறைக்கு அனுப்பிவைக்குமாறும் அரசாங்கத்தாலே ஆரம்பிக்கப்பட்டது. கொழும்புத்துறைமுகத்திலே நெருக்கடிஏற்படும்போது உணவுக்கப்பல்கள் இத்துறைமுகத்துக்குத் திருப்பிவிடப்படுகின்றன.

## இரத்த தான வேண்டுகோள்

யாழ்ப்பாண அரசினர் பெரியஆஸ்பத்திரியிலுள்ள இரத்தவங்கி எந்தவேளையும் வரண்டுகிடப்பதாலே ஆபத்தானநிலையிலுள்ள நோயாளிகளுக்குச் சிகிச்சையளிக்கத் தேவைப்படும் இரத்தத்தைப்பெற முடியாதிருக்கிறது. இக்குறைபாட்டை நிவிர்த்திசெய்யும் நோக்கமாகச் சுகாதாரப்பகுதியினர் இரத்ததானம்செய்ய முன்வருமாறு மக்களுக்கு ஒருவேண்டுகோள் விடுத்திருக்கின்றனர்.

## முதலாவது தமிழ்ஊழியர்

சிங்களத்தில் தேர்ச்சிபெற முயற்சியெடுக்காத அரசாங்கஊழியர்களைக் கட்டாயமாக ஓய்வுபெறச் செய்யுமாறு அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கையாலே முதலாவது தமிழ்உத்தியோகஸ்தராகத் திரு. திருநாவுக்கரசு தியாகராசா சென்ற 1-ந்திகதியன்று அரசாங்கசேவையிலிருந்து வெளியேறினர். இவரின் வயது 54. 1927-ம் ஆண்டு ஒருலிகிதராகச் சேர்ந்தஇவர் கடந்த 37வருடங்களாகத் தமது கடமைகளைச் சரிவரநிறைவேற்றிச் சேவை புரிந்திருக்கிருர். நிற்க, நிபுணர்களைக் கலந்தாலோசிக்கும்வரை சிங்களத்தில் தேர்ச்சிபெருத அரசாங்க ஊழியர்களுக்குக் கட்டாய ஓய்வு அறிவித்தல் வழங்குவதைத் தற்காலிகமாக நிறுத்திவைப்பதுபற்றி அரசாங்கம் ஆலோசித்து வருவதாகத் தெரியவருகிறது.

## வாழ்க்கைச் செலவுப் புள்ளி

சென்ற வைகாசிமாதத்திலே வாழ்க்கைச் செலவுப்புள்ளிகள் 112·7 ஆகும். இது முந்திய சித்திரைமாதத்திலும் 0 6புள்ளிகளால் அதிகரித்துள்ளது. சில மரக்கறிவகைகள், பருப்பு, மீன், இறைச்சி ஆகியவற்றினதும், சில துணிவகைகளினதும் விலைகள் அதிகரித்தமையே சென்ற வைகாசியில் வாழ்க்கைச்செலவு அதிகரிக்கக் காரணமாகும்.

## சிங்களதேர்ச்சியில்லாத அரசாங்க ஊழியர்கள்

சிங்களத்தில் தேர்ச்சியடையாத காரணமாக 394அரசாங்கஊழியர்கள் வேலைநீக்கம் செய்யப்படும் நிலைமையில் இருக்கின்றனர். இவர்களின்கதியை மந்திரிசபையின் உபகமிற்றிஒன்றின் தீர்ப்புக்கு நீதிமந்திரி விட்டிருக்கின்ருர். இவர்கள் 1956-ம்ஆண்டுக்குப் பின்னும் 1961-ம்ஆண்டுக்குமுன்னும் அரசாங்கசேவையில் சேர்ந்தவர்கள். சிங்களதேர்ச்சி பெறுவதற்கான இரண்டுவருடகாலஅவகாசம் இவர்களுக்கு வழங்கப்படவில்லை. இவர்களில் பத்துப்பேர் தொழில்நுட்ப ஊழியர்கள். உபகமிற்றியின்முடிவு இன்னும் ஒருவாரத்தில் மந்திரிசபையிடம் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

## பிரசவவிடுதி வேண்டுகோள்

அச்சுவேலி, அரசினர் ஆஸ்பத்திரியிலே நாளாந்தம் பிரசவநோயாளர் தொகை அதிகரித்து வருவதை முன்னிட்டு அங்கு ஒரு பிரசவவிடுதியை வேருக அமைத்துக் கொடுக்குமாறு அங்குகூடிய பகிரங்க கூட்டம்ஒன்று சுகாதார-வீடமைப்பு மந்திரிக்கு ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

## நூறுபேரில் ஒருவரே

சிங்களமொழிமூலம் மாணவஆசிரியர் பரீட்சைக்குத்தோன்றிய நூறு முஸ்லீம்மாணவர்களில் ஒரேயொருவர் மட்டும் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்ருர். இது முஸ்லீம்பாடசாலைகளில் சிங்களமே போதனுமொழியாக்கப்படவேண்டுமென்றுநிற்கும் இலங்கைச் சோனகர்களுக்கு ஒருதலையடியாகும். ஆயினும், இந்தநூறுமுஸ்லீம்மாணவர்களையும் நாட்டிலுள்ள பல்வேறுபாடசாலைகளிலும் ஆசிரியர்களாக நியமிக்கும்படியாய் சோனகவாலிபர்லீக் கல்விமந்திரியைக் கேட்டிருக்கிறது.

## மின்சார நெசவாலை.

புலோலிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமாசம் பத்தாயிரம்ரூபாவரை செலவிலே மின்சார நெசவாலைஒன்றை அமைக்கத் . தீர்மானித்திருக்கிறது. இன்னும் பல்வேறு சிறுகைத்தொழில்களை ஆரம்பிப்பதுபற்றியும் சமாஜ நிர்வாகசபைக் கூட்டத்தில் ஆலோசிக்கப்படலாயிற்று. கண்ணுடித்தொழிற்சாலை அமைப்பதுபற்றிக் கூட்டுறவு ஆணையாளரின் ஆலோசனையைப் பெற்று நடவடிக்கை எடுப்பதென்றும் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

## இராணுவத்திற்கு ஆட்கள்

இலங்கை இராணுவத்திற்கு ஆட்களைத்திரட்டும்வேலை ஆரம்பமாகவிருக்கிறது. தொண்டர்படையில் ஏற்கனவேஉள்ளவர்களில் தகுதியுடையவர்களுக்கே முதல்வாய்ப்பு அளிக்கப்படவிருக்கிறது. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிலே ஏதாவது ஒருமொழியில் ஐந்தாம்வகுப்பில் தேர்ச்சியடைந்தவர்களும், 1-7-64-இல் 18 வயதுக்குக்குறையாதவர்களும், 31-8-64-இல் 22 வயதுக்கு மேற்படாதவர்களும் மனுப்பண்ணிக்கொள்ளலாம்

---

● திவ்விய சற்பிரசாதத் திருநாள் திருச்சபைமுழுவதிலும் கொண்டாடப்பட வேண்டுமென ஏற்பாடுசெய்தவர் நான்காவது ஊர்பான்எனும் பாப்பானவரே. இதுநிகழ்ந்தது 1264-ம்ஆண்டிலாகும். அதனல் இத்திருநாள் ஆரம்பமான 700-ம்ஆண்டு நிறைவுவிழாவை அது இம்முறை கண்டுகொள்ளலாயிற்று.


விவசாய ரசாயன
மருந்து வகைகளாலும்
கிருமி நாசினி
மருந்துவகைகளாலும்
உங்கள் பயிர்களை அழிக்கும்
பூச்சி புழுக்கள்
மற்றும்
பயிர்களைப் பாதிக்கும்
புற்களையும்
அறவே ஒழித்து
உங்கள் கமத்தொழிலில்



அதிக லாபத்தைப் பெறுங்கள்!
இம் மருந்துகளைத் தெளிக்கக்கூடிய
சிறந்த
தெளிகருவிகள் (SPRAYERS)
எங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்
விபரங்கட்கு இன்றே எழுதுங்கள்
ஓட்டோஸ் லிமிட்டெட்,
தந்தி : "AUTOS" யாழ்ப்பாணம். டெலிபோன் : 496.
கிளை
தந்தி : "AUTOS" வவுனியா. டெலிபோன் : 577.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க, 5-ம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஆனிமாதம் 6-ந் திகதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org